அன்புள்ள வாடிக்கையாளருக்கு,

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள நுகர்வோர் சாசனத்தின் கீழ் கோரப்பட்டுள்ள தேவையின் பிரகாரம், நாங்கள் வழங்குகின்ற உங்களுக்குத் தேவையான மற்றும் உங்களுக்குப் பொருத்தமான வங்கிக் கணக்குத் திட்டங்கள்/சேவைகளைத் தேர்ந்தெடுக்கும் போது உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்களை [KFD] நாங்கள் தயாரித்துள்ளோம்.

முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணமானது [KFD], இலங்கை ரூபாய்களை அடிப்படையாகக் கொண்ட பல்வேறுபட்ட கணக்குகள் மற்றும் கணக்குகளுடன் தொடர்புடைய விசேட பொதிகள் மற்றும் தனிப்பட்ட வங்கியியலுக்கான நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்குகள் ஆகியவை பற்றிய விரிவான அறிவை உங்களுக்கு வழங்கும்.

எவ்வாறாயினும், பின்வரும் KFD யில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களானது சட்டத்தில் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மற்றும் வங்கியின் கொள்கைகளிலும் நடைமுறைகளிலும் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக திருத்தத்திற்கு உட்பட இடமுள்ளது என்பதைக் கருத்தில் கொள்ளவும். வங்கியின் அவ்வாறான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக KFD இல் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து வங்கி அது தொடர்பாக உங்களுக்கு அறிவிக்கும் என்பதைக் கவனிக்கவும்.

உங்களுக்கு மேற்கொண்டும் தகவல் தேவைப்பட்டால், கீழே குறிப்பிட்டுள்ளவாறு www.nationstrust.com வெப்தளம் ஊடாக எங்களைத் தொடர்பு கொள்ளவும். அல்லது 011 4 711 411 என்ற 24 மணி நேர துரித அழைப்பு மையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள உங்களின் ஏதும் கணக்குகள் தொடர்பான ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால், முறைப்பாடுகளைக் கையாளும் அதிகாரி, நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பீ.எல்.சீ, இலக்கம் 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என்ற முகவரிக்கு முறைப்பாடு உள்ளடக்கப்பட்ட சுருக்கமான ஓர் அறிக்கையை எழுத்தில் அனுப்பி வைக்கவும். அல்லது [+94(0)114711411] எனும் தொலைபேசி இலக்கம் / [customerservice@nationstrust.com] எனும் மின்னஞ்சல் மூலம் எங்களைத் தொடர்பு கொள்ளவும். நாங்கள் உங்களுக்கு விரைவில் பதிலளிக்கத் தயாராக உள்ளோம்.

கணக்கு பற்றிய விபரங்கள்	வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கின்ற நன்மைகள்	கட்டண வகைகளும் ஏனைய வங்கி அறவீடுகளும்	ஒரு கணக்கைத் தொடங்குவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்	முக்கியமான நியதிகளும் நிபந்தனைகளும்
விசேட கணக்குகள்				
நேஷன்ஸ் சிறுவர் முதலீட்டுத் திட்டக் கணக்கு இது, குறைந்த பட்சம் 2 வருடங்களையும் அதிக பட்சம் 18 வருடங்களையும் ("இலக்குக் காலமாகக்") கொண்ட ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு காலவரையின் முடிவில், வாடிக்கையாளர் ஒருவருக்கு தனது பிள்ளையின் சார்பில் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட தொகையை அடைந்து கொள்வதற்காக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து சேமிப்பதற்காக ("நிலையான மாதாந்த தவணைக் கட்டணம்") ஒரு தொகையை ஒதுக்குவதற்கு வாடிக்கையாளருக்கு இடமளிக்கின்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு திட்டமாகும்.	இலக்குக் காலம் முழுவதும் உத்தரவாதமளிக்கப்பட்ட வட்டி விகிதம். எந்தப் பிள்ளைக்காக இந்தக் கணக்குத் திறக்கப்படுகிறதோ, அந்தப் பிள்ளையின் நலனுக்காக அந்த பிள்ளையின் பெற்றோர் அல்லது சட்டபூர்வ பாதுகாவலருக்கு அதிக பட்சம் ரூ. 2 மில்லியன் வரை இலவச ஆயுள் காப்பீடு.	ஒரு கணக்கை நிச்சயிக்கப்பட்ட காலவரை பூரணமடைய முன்னர் மூடினால், பின்வரும் வட்டி விகிதத்தில் அபராதம் விதிக்கப்படும்: முதலீட்டுத் திட்டத்தை 2 ஆண்டுகளில் அல்லது அதற்கு முன் மூடினால் - நேஷன்ஸ் சேவர் வட்டி விகிதத்தினை ஒத்த வட்டி விகிதம். முதலீட்டுத் திட்டத்தை 2 ஆண்டுகளுக்குப் பிறகு மூடினால் - நேஷன்ஸ் சேவர் வட்டி விகிதத்துடன் 1% சேர்க்கப்படும்.	பின்வரும் ஆவணங்கள் சகிதம் நேஷன்ஸ் சிறுவர் முதலீட்டுத் திட்டக் கணக்கைத் திறப்பதற்கான படிவம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்: • பிள்ளையின் பிறப்புச் சான்றிதழின் ஒரு பிரதி • பெற்றோரின்/பாதுகாவலரின் தேசிய அடையாளஅட்டையின் (NIC) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் பிரதி • தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவதிவிட முகவரி வேறுபடுமாக இருந்தால், முகவரியை உறுதிப்படுத்துவதற்கு எழுத்துமூல ஆதாரம் அவசியமாகும்.	பிள்ளையின் சார்பாக பெற்றோர் அல்லது பாதுகாவலர் கணக்கைத் திறக்க வேண்டும். குறைந்த பட்ச இருப்பு பற்றிய அவசியம் கிடையாது. எவ்வாறிருப்பினும், வாடிக்கையாளர் மொத்த இலக்குத் தொகையை அடைவதற்கு நிலையான மாதாந்த தவணைக் கட்டணத்தை தொடர்ந்து வைப்புச் செய்து வர வேண்டும். கணக்கு வைத்திருப்பவர் மரணித்தால், அந்த நிதி சிறுவரின் பெயரில் ஒரு சிறுவர் சேமிப்புக் கணக்கிற்கு மாற்றப்படும். வாடிக்கையாளரின் தற்றுணிபுக்கு இணங்க வங்கியால் வழங்கப்பட்டுள்ள ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட முதலீட்டுத் திட்டத்தின் கொடுப்பனவு அட்டவணையின் இலக்குத் தொகையை தீர்மானிக்க முடியுமாயினும், வைப்புச் செய்ய வேண்டிய மாதாந்த தவணைப் பணத்தை அவ்வாறு தீர்மானிக்க முடியாது. இலக்குத் தொகை ஏற்புடைய சந்தர்ப்பங்களில் அரசாங்க வரிகளுக்கு உட்படும். நேஷன்ஸ் சிறுவர் முதலீட்டுத் திட்டத்தின் கீழ் மற்றும் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கின் கீழ் வாடிக்கையாளருக்கு ஒரு காப்புறுதிக் காப்பீடு வழங்கப்பட்டிருந்தால், வாடிக்கையாளரின் மரணத்தின் போது செலுத்தப்பட வேண்டிய அதிகபட்ச தொகை ரூ. 2,000,000 ஆகும்.

- இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, அனைத்து பொதுவான நியதிகள் மற்றும் நிபந்தனைகளும் நேஷன்ஸ் சிறுவர் முதலீட்டுத் திட்டக் கணக்கிற்கு ஏற்புடையதாகும் என்பதுடன் முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறைகளானது பொதுவான வியாபார நிபந்தனைகளின் கீழுள்ள https://www.nationstrust.com/images/pdf/general-business-conditions pdf இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

- அவ்வப்போது திருத்தத்திற்கு உட்படும் கட்டண வகைகள் மற்றும் வங்கியின் ஏனைய கட்டணங்கள் ஆகியன வங்கியின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும்.

- இந்த ஆவணத்தின் ஆங்கில, சிங்கள மற்றும் தமிழ்ப் பிரதிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்பட்டால், இதன் ஆங்கிலப் பிரதியே செல்லுபடியானதாகக் கருதப்படும்.